சார்பு நீதிமன்றம், அவிநாசி

**O.S.No. 444 /2016**

**நாள் : 21.03.2023**

**வா.சா. 2 செல்வராஜ்**

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :

1) நீதிமன்றத்திலிருந்து எனக்கு அழைப்பாணை வரவில்லை. வாதி தனசேகர் அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். பாகப்பிரிவினை வழக்கு ஆகும். ராமசாமிக்கவுண்டருக்கு 3 பெண் மக்கள் மற்றும் 1 ஆண் மகன் உள்ளனர். 1-ம் பிரதிவாதி சண்முக சுந்தரசாமி, 3,4 பிரதிவாதிகள் ராமாத்தாள், சுப்புலட்சுமி மற்றும் இந்த வழக்கில் தரப்பினரல்லாத அங்காத்தாள் அவர்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் அங்காத்தாளை தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனக்கு வாதியின் பக்கத்து தோட்டம் என்பதை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. ஆனால், பக்கத்து தோட்டம் என்னுடையதுதான். 3,4 பிரதிவாதிகள் மோசடி செய்து ஆவணம் எழுதி வாங்கிக்கொண்டார்கள் என்று சொல்லியிருக்கிறேன். எப்படி மோசடி என்று சொல்கிறேன் என்றால் சண்முக சுந்தரசாமி பத்திரம் எழுதிக்கொடுக்கும் நிலைமையில் இல்லை. அதனால் சொல்கிறேன். அவர் கை,கால்கள் வராமல் இருந்தார். மேலும் அவருக்கு பேச்சும் சரியாக வராது.

2) மேற்படி சண்முகசுந்தரசாமி நல்ல மனநிலையில், முழு சுய நினைவுடன் 3,4 பிரதிவாதிகளுக்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தார் என்றால் சரியல்ல. மேற்படி சண்முக சுந்தரம் இந்நீதிமன்றத்திலேயே செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்ததற்கு முன்பும், பின்பும் விசாரணைக்கு தன்னிச்சையாக வந்துள்ளார் என்றால் சரியல்ல. அவர் மற்றவரின் உதவியுடன்தான் நீதிமன்றத்திற்கு வந்தார். எனக்கு, ராமாத்தாளுடன் பேச்சு வார்த்தை உள்ளதா என்றால் பேச்சுவார்த்தை உள்ளது. வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. 3-ம் பிரதிவாதி மீது எனக்குள்ள தனிப்பட்ட விரோதம் காரணமாக அவருக்கு எதிராக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

*Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.*

K SURESH KUMAR

Digitally signed by K SURESH KUMAR
Date: 2023.02.09 01:37:02 +0530

Subordinate Judge,
Avinashi.